த்^{3} கி^{3} த்^{3} கி^{3} தா^{3} ந் த்^{3}ா ம் த்^{3} கி^{3}த் தாம் |

ரி ஸ ரீ ம் க் ரி க் ரி ஸ் |
தி^{4} மித த்^{3} தி^{4} மி தி^{4} மி கி ட |

ரி ரி ரி ப் ம் க் ரி க் ரி ஸ் |
த^4 த^4 த^4 த்^{3} கு^{3}த்^{3} கு^{3}த்^{3} கு^{3}த்^{3} கு^{3}த்^{3} கு^{3}த்^{3} கு^{3}த்^{3} கு^{3} |

நித பம மக ரிக ரி ஸ |
தொம் தொம் தொம் தொம் கி^{3} ண |

ஜாவட :

ஸ் ஸ் ஸ் ஸ் ரி ரி ம் ம் ப்ா | ம் ப் த்ா ம்ா ப் ம் க் ரி |
துத்த் கு^{3}த் கு^{3}த் கு^{3}த் கு^{3}த் கு^{3}த் கு^{3}த் கு^{3} ஜேம் | த த்^{3} தி^{4}ம் ன்னு ம் திமி கி ட |

ப் ம் ம் ப் ம் க் ரி க் ரி ஸ் | ஸா நி த நீ ஸா ஸா |
கு த கி ட கி ட்ண த ஹ கி ட | கு^{4}ர் ர ட் டக் கிண் ணம் |

நி நி ஸா நி ஸ் நி நி த ப | தா மா பா நீ தா |
கு குங் த^{3}த் த குங் த^3 தி^{4} குங் த^3 | ஜம் த்ர ஜ்^{2} ஜ்^{2}ம் த்ரா |

நி நி நி ஸ்ா ஸ் நி க் ரி ஸ் | ஸா நி நி ஸா ஸா ; |
த டி^{4} ம் டி^{4}க் கு டி^{4} ம் கு கு | ஜ^2 ம் த் த.ரி த் தா |

ஸ் ரி நி த ப த ம பா ப | நி த நி ஸ் ஸ் ரி நி ஸ்ா ஸ் |
த ண கி ண த ரி த^4 ணேகு | ஜ^2 ஜ^2 கி ண த ரி க^4 ரே கு |

நி ரீ ரி நி ஸ் ா ஸ் ஸ்ா | ரி ம ப த ம ா ப ா ; |
த ரே கு தி^{4} ரே கு தா | ஜ^{2} ம் த ரி கு ம் தா |

ஸ ா ரீ ம் க் ரி க் ஸ் | ரி ம் ம் ப் நி த நி ஸ் நி த் |
த ா ஹம் தி^{2} மி தி^{4} மி கி ட | த கு டி^{4} கு தொங் கி^{3} ண ம் கி^{8} |

ப் த் ம் ப் ம் க் ரி க் ரி ஸ் ||
ஜ்க ஜ்க ஜ்க ஜ்க ஜ்க ஜ்க ஜ்க ஜ்க ஜ்க ||

ஆலாப காண்டம்

ஸ் நி ஸ் நி ஸ் ரி ம் மா , க்ா , ரீ , ரி க் ா ரி ஸ்ா , நி ஸ் நீ , ஸ் ரி ஸ்ா , ரி க ரீ ,
கும் ப^{4} கே^{4}ா . ஓ . . ணே . . . . ம . . . . . .

க் ரி ஸ் நீ ஸ் ரீ ஸ் நீ ரி ஸ் நி த த த நீ த ப பா , பா ஸ் ஸ் ஸ்ா , நீ த தா த நி
. . . . ஜ^{2} ரீ நி த்ய நீ வா . ஸ ரே . .

பா , ப ம ப ம ப ஸ நீ
அ ப . ரி . . . .

த நி நி ஸ்ா ; , ஸ் நி ஸ் ரி ம ா ; , ப த ம ா க் ரி ரி க் ா ரி ஸ் ா ;
இ ய் யா அ ஆப்

ஸ நீ , ரி ஸ் ா , க் ரீ , க் ரி ஸ் நீ
த ஸா . . . . . , . .

ஸ் ரீ ஸ் நீ ரி ஸ் நி த ா தா த நீ த பா ; ப ப ம ப ம ப நி த நி ஸா ;
ரங் க^{3} பா . . ணி . . . ரே

முத்ராகணம் :

ரீ ம் ப் நி த் ப் த்ா த் | ம் ா ப்ா ம் க் ரி க் ரி ஸ்
ச ங் க ர மு னி ம த ப் ர | தி ஷ் டா ப ந கோ . வி து^{3}

ஸ்ா நி நி ஸ்ா நி க் ரி ஸ் | ஸ் ா ஸ் ா நி த ப த ம ப |
கே^{8}ா விந்தா^{3}த்^{4} . வ ரி நா | கா^{3} அம் பி க . . ஸ த |

நி த நி ஸ் ரி நி ஸ்ா ஸ் ா | ஸ நி த நி ஸ் ரீ ரி ம் ம் ப் |
வேங் கட ம கி^{2} ச ங் த்^{3} ரு | ப ரி ர சி ம் ன் ள லெ |

த் ம் ப் ம் க் ா ரி க் ரி ஸ் | நி த ப த ம க ரி க ரி ஸ ||
கை . வா . ர ப் ர ப^{3}ங் த^{4} | ம வ த^{4} . . . . ர ய ||

ஸ ஸ ஸ் ா நி ஸ் நி நி த ப | ம ப நீ த ஸா ஸ் ா ||
தோ த்^{3} கி^{3} த^{8}ா ம் தி மி தி^{4} மி கி ட | தொங் கி^{8}ணம் கி^{3} ண்ணு ||

கீதம்

ரிகுமபதிநு]

மேளம் 29 : தீ^{4}ரசங்கராப^{4}ரணம்

[ப^{3}ாணமர்

ஜன்யம் (பாஷாங்கம்) | : பி^{8}லஹரி

லக்ஷியகீதம் - ரூபகதாளம் - வேங்கடமகி

துருவம் :

ஸ் ரீ க் ப் ா | த் ப் த் நி த ப | ம் க் கா ரி ஸ் | ரி ஸ நி ஸ் த ப |
அ ரு ந் த^{4} தி | இ . ரி தி ய ம் | பு^{3} தீ^{4} தே . . | நி ரு ந் த^{4} தி . |
ம க பா பா | த ப தா ஸ்ா | ரி ஸ் ரீ க்ா | த் ப் ம் க் ரி ஸ் |
ய . ரே ரே | ஸ ரு வத் தோ | மு க^{2} மு க்^{2} ய | க் ர து பா வ ணி |
நி த

அந்தரி :

ஸ் ா ரீ க் ா ரி ஸ் ஸ் ா ;
ந ா க^{3}ா ம் பா^{3} . . ரே

ஜாவட :

ஸ் நி ஸ் ரி | க் ரி ஸ் நி தா | ஸ் நி த ப த ப | த ரு த ப ம க

த ப த ப ம க | ரீ கா ரீ | ஸா ரீ கா | க க பா ; |

க ப த ஸ் நி த | ஸ் ா ரி ஸ் ரி க் | க் ப் த் ஸ் நி த் | ஸ் ா ஸ் நி த் ப் |

த ப் ம் க் ரி ஸ் | நி த ‖ ஸ் ா ரீ க் ா ரி ஸ் ஸ் ா ; ‖
ரா | ணி ‖ ந ா க^{3}ா ம் பு^{3}ா ரே ‖

கீதம்

ரகிமிபதிநு]

சக்கரம் 8 : மேளம் 47

[வஸ்ᵔமா

ராகாங்க ராகம் 47 : ஸௌவீர

லக்ஷிய கீதம் – திரிபுட தாளம் – வேங்கடமகி

துருவம் :

ஸ்ா | ஸ் நி த நி த மா | பா த நி ஸ் ரி ஸ் | க் ரி க் ரி ரி ஸ் நி |
தா^{1} | ர ' . த^{4} ரி . வா | இ^{3} த ஸ ம் க^{3} தி | மி ர ம் வ லெ ய . |

ஸ்ா ; , க் க் | ஸ்ா ரி க் த் ம்ா | க் ரி ஸ ரி ஸ் நி த | ஸ்ா ஸ் நி த நி த |
பா ப் ர தி | தீ^{4} ர வி ப^{4} வா | நு ப^{4} வ ஸ . வி . | ஐ ய அ இ ய இ |

ம ம த ம க ரி ஸ |
இ ய இ ய ரெ . ரெ |

அந்தரி :

பா ப த ம ப த | ஸ்ா நி த நி த ம | ப த நி பா ரி ரி | க் க் க் ரி க க் ரி | ஸ்ா ;,
ஆ ரெ ச ங் க ர | லோ க ச ங் க ர | ப்ரு ம் கி^{2} த ச ச ச | அ ங் க பி^{3} ரு த^{3} ம் | கா

ஜாவட :

க் ஸ் | ரி ஸ் ரி த ப ப த | க் ரி ஸ் க் ரி ஸ்ா | ஸ் தா க் ரி , |
வி தி | கோ . டி கோ . . டி | ருண் ட³ மா . ல | த்³ த⁴ ரு ரே |

ஸ்ா ரி நீ த ப | த மா பா ; | த மா ப த நி ஸ் | க் ரி ஸ் த் ம் க் ரி |
உ த் த்³ த⁴ தத் தம் | ட³ வா ரே | அ . . . . . | ரெ . ரெ தி ய இ ய |

ஸ் நி த நி த ம க | க ரி ஸ ம ப த நி | ம பா த் நி ஸ் ரி | ஸ் ரி க் த் ம் ப் த் |
அ இ ய அ இ ய இ | ய இ ய அ இ இ ய | இ ய த் த் ய இ ய | ரா . க³ ர ங் க³ |

ஸ்ா , த் த் நி த் | நி த் ம் க் க் ரி ஸ் | நி த நி த ம க ஸ ‖
ரே ஸ உ வி . | . . ர ரா . . க³ | வ ஸ ம . ச் க் ர ‖

பா ப த ம ப த | ஸ்ா நி த நி த ம | ப த நி ஸ்ா ரி ரி | க் க் ரி க் க் ரி | ஸ்ா ; , ‖
ஆ ரெ ச ங் க ர | லோ க ச ங் க ர | ப்ரு ம் ஹி² த ச் சக ச | . ங் க பீ³ ரு த³ ம் | கா ‖

கும்பகோணம் மகாக்ஷேத்திரம்

எஸ். ராமகிருஷ்ண சாஸ்திரிகள்

ஆஸ்தான வித்வான், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்.

உலகில் மனிதன் தனது பொருளையும் உழைப்பையும் கலைத் திறனையும் கல்வியையும் தத்துவ ஞானத்தையும் கற்கோவில்களின் மூலமாகவும், நூல்களின் மூலமாகவும் பரம்பொருளான கடவுளுக்கு அர்ப்பணம் செய்ததில் முதன்மையிலுள்ளது இந்திய நாடே. அதிலும் இந்திய நாட்டிலுள்ள கோவில்களையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், தமிழ் நாட்டிலுள்ள கோவில்கள் மற்றப் பிராந்தியங் களிலுள்ள கோவில்களைவிட எண்ணிக்கையில் அதிகமாகவே இருக் கின்றன. அவ்வளவு ஆலய நிர்மாணத்துக்கு வேண்டிய சில்பத் திறன், ஆகமத்திறன் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்னும் உள்ளன்பு, இவைகளுக்கெல்லாம் நம் தமிழ் நாடு கருவூலமாக இருந்தது. நம் பெரியோர்கள் அவ்வளவு உயர்ந்த மனமும் அன்பும் பண்பும் உடையவர்களாக இருந்தார்கள் என்பது நமக்கு அறியக்கிடக்கிறது. இந்தத் தமிழ் நாட்டில் பாடல் பெற்ற ஸ்தலங்கள் 276. சோழ நாட்டில் உள்ளவை 190 என்று சோழ நாட்டில் பாடல் பெற்ற ஸ்தலங்களைப்பற்றிச் சிவஸ்தல மஞ்சரியில் த. சுப்பிரமணிய பிள்ளை எழுதியிருக்கிறர். அதில் எந்த எந்த ஸ்தலங்களைத் தரிசிக்கலாம் என்னும் விவரம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதில் கும்பகோணம் ஸ்டேஷனில் இறங்கித் தரிசனம் செய்ய வேண்டிய ஸ்தலங்கள் முப்பது. அவைகளின் விவரமாவது :—

1. அரிசிற்கரைப்புத்தூர்
2. திருவாப்பாடி
3. ஆலூர்
4. இன்னம்பூர்
5. கொட்டையூர்
6. கலயநல்லூர்
7. கருக்குடி
8. கருவிலி
9. குடந்தைக் கரரோஹணம்
10. குடந்தைக் கீழ்க்கோட்டம்
11. குடமூக்கு
16. திருச்சேறை
17. திருந்துதேவன்குடி
18. திருநல்லம்
19. திருநறையூர்ச்சித்தீச்சுரம்
20. திருநாகேச்சுரம்
21. திருநாவலூர் மயானம்
22. பட்டீச்வரம்
23. பழையாறைவடதளி
24. திருப்பனந்தாள்
25. திருப்புறம்பயம்
26. பேணு பெருந்துறை

கும்பகோணம் மகாக்ஷேத்திரம்

எஸ். ராமகிருஷ்ண சாஸ்திரிகள்
ஆஸ்தான வித்வான், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்.

உலகில் மனிதன் தனது பொருளையும் உழைப்பையும் கலைத் திறனையும் கல்வியையும் தத்துவ ஞானத்தையும் கற்கோவில்களின் மூலமாகவும், நூல்களின் மூலமாகவும் பரம்பொருளான கடவுளுக்கு அர்ப்பணம் செய்ததில் முதன்மையிலுள்ளது இந்திய நாடே. அதிலும் இந்திய நாட்டிலுள்ள கோவில்களையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், தமிழ் நாட்டிலுள்ள கோவில்கள் மற்றப் பிராந்தியங் களிலுள்ள கோவில்களைவிட எண்ணிக்கையில் அதிகமாகவே இருக் கின்றன. அவ்வளவு ஆலய நிர்மாணத்துக்கு வேண்டிய சில்பத் திறன், ஆகமத்திறன் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்னும் உள்ளன்பு, இவைகளுக்கெல்லாம் நம் தமிழ் நாடு கருவூலமாக இருந்தது. நம் பெரியோர்கள் அவ்வளவு உயர்ந்த மனமும் அன்பும் பண்பும் உடையவர்களாக இருந்தார்கள் என்பது நமக்கு அறியக்கிடக்கிறது. இந்தத் தமிழ் நாட்டில் பாடல் பெற்ற ஸ்தலங்கள் 276. சோழ நாட்டில் உள்ளவை 190 என்று சோழ நாட்டில் பாடல் பெற்ற ஸ்தலங்களைப்பற்றிச் சிவஸ்தல மஞ்சரியில் த. சுப்பிரமணிய பிள்ளை எழுதியிருக்கிருர். அதில் எந்த எந்த ஸ்தலங்களைத் தரிசிக்கலாம் என்னும் விவரம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதில் கும்பகோணம் ஸ்டேஷனில் இறங்கித் தரிசனம் செய்ய வேண்டிய ஸ்தலங்கள் முப்பது. அவைகளின் விவரமாவது :—

1. அரிசிற்கரைப்புத்தூர்
2. திருவாப்பாடி
3. ஆவூர்
4. இன்னம்பூர்
5. கொட்டையூர்
6. கலயநல்லூர்
7. கருக்குடி
8. கருவிலி
9. குடந்தைக் கரரோஹணம்
10. குடந்தைக் கீழ்க்கோட்டம்
11. குடமூக்கு

16. திருச்சேறை
17. திருந்துதேவன்குடி
18. திருநல்லம்
19. திருநறையூர்ச்சித்தீச்சுரம்
20. திருநாகேச்சுரம்
21. திருநாவலூர் மயானம்
22. பட்டீச்வரம்
23. பழையாறைவடதளி
24. திருப்பனந்தாள்
25. திருப்புறம்பயம்
26. பேணு பெருந்துறை

12. திருக்குடவாசல்
13. திருச்சத்திமுற்றம்
14. சிவபுரம்
15. திருச்சேய்நலூர்
27. திருவலஞ்சுழி
28. திருவியலூர்
29. விஜயமங்கை
30. திருவைகாவூர்

அடுத்தபடியாக, திருவாரூர் ஸ்டேஷனுக்கு அருகில் 14 ஸ்தலங்கள் இருக்கின்றன. அதற்கு அடுத்தவை குற்ருலம், சீகாழி ஸ்டேஷன்கள். இவைகளுக்கு அருகில் 11 & 11 ஸ்தலங்கள் இருக்கின்றன. அடுத்தபடியாக, காஞ்சிபுரத்து ஸ்டேஷன் வருகிறது. அதற்கு அருகில் 10 ஸ்தலங்களிருக்கின்றன.

கும்பகோண க்ஷேத்திரத்தைச் சுற்றிப் பத்து மைல்களுக்குள் (பஞ்சக்ரோசங்களுக்குள்) பார்த்தால் உலகத்திலேயே ஏற்பட்டுள்ள கற்கோவில்களைவிட அதிகமான கோவில்களைக் காண்கிருேம். அதன் பொருள் என்னவென்ருல் உலகத்திலேயே பண்புக்கும் கல்விக்கும் கடவுள் அன்புக்கும் தத்துவ ஞானத்துக்கும் கும்பகோண க்ஷேத்திரத்தின் பஞ்சக்ரோச எல்லேயே கேந்திர ஸ்தானம் என்பதே. தற்காலத்திய சூழ்நிலையை அநுஸரித்து, வேதசாஸ்திரக் கல்வி இங்கிலீஷ் படிப்பாக மாறிய சென்ற நூற்றாண்டில் கூட, கும்பகோணத்தின் கல்லூரியைத் தென்இந்தியாவின் கேம்பிரிட்ஜ் என்று ஆங்கிலம் கற்ற புலவர்கள் புகழ ஆரம்பித்தார்கள். இந்தக் கல்லூரிக்கு மாணவர்களே அடிப்படைப் பயிற்சியில் தேர்வுபெறச் செய்து அனுப்பிக் கொண்டிருந்த பெருமை ஆதிமுதற்கொண்டு ஸ்ரீமான் கிருஷ்ண ஐயர் முதலியவர்களைத் தலைமையாகக் கொண்ட நம் டவுன் ஹைஸ்கூலேச் சாரும்.

நூல்கள் விஷயத்திலும், இந்தியாவிலுள்ள கையெழுத்துப் பிரதிகள் நூற்சாலேகளில் தஞ்சை சரஸ்வதி மஹால் நூற்சாலே, சென்னே அரசாங்கக் கீழ்த்திசை நூற்சாலே, அடையாறு நூல் நிலேயம் இந்த மூன்று தமிழ் நாட்டு நூல் நிலேயங்களிலுள்ள பண்டைய நூல்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டால், உலகத்திலுள்ள மற்றக் கையெழுத்து நூல் ப்ரதிகளின் கணக்குக்குறைவாக இராது. உலகப் பண்புக்கெல்லாம் சோழநாட்டுப் பண்பு கேந்திரம். அதில் கும்பகோண க்ஷேத்திரத்தைச் சுற்றிய ஒரு காதம் அதிலும் கேந்திரம்.

பண்டைக் காலத்தில் எல்லாத் துறைகளிலுள்ள கல்வியும் மாணவர்கள் குருவின் வீட்டுக்குச் சென்று அங்கேயே ஒரு செலவும் இல்லாமல், கட்டிடங்களின் அவசியம் இல்லாமல், மூலதனங்களின்

அவசியமில்லாமல் அங்கேயே கற்றுக்கொள்ளப்பட்டுப் பரம்பரையாக வளர்க்கப்பட்டு வந்தது. ஆனல் பிற்காலத்தில் ஏற்பட்ட அவசியங்களேக் கருதி கல்விச்சாலேகள் அமைத்தன. அவைகளுக்கு அந்தக் காலத்தில் பாடசாலே என்று பெயர் அமைந்தது. சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன்பே கும்பகோணத்தில் ராஜா கோவிந்த தீக்ஷிதர் என்னும் மகா மந்திரியினுல் ராஜா பாடசாலே நிறுவப்பட்டிருக்கிறது. அவருக்கு அந்தக் காலத்தில் ஐயன் என்று பெயர். கும்பகோணத்திலுள்ள ஐயன் தெரு அவர் பெயரால் ஏற்பட்டது. தஞ்சாவூரிலுள்ள ஐயன் தெரு, ஐயங்குளம், பசுபதிகோவிலுக்கு அடுத்த ஐயம் பேட்டை, திருவாரூருக்கு மேற்கிலுள்ள மணக்கால் ஐயம் பேட்டை போன்ற இடங்களெல்லாம் அவருடைய பெயரால் அமைந்தவை. கல்விச்சாலேயைத் தவிர அவர் தர்ம நூல்களில் சொல்லப்பட்ட எல்லா மகாதானங்களேயும் செய்தார். மகாதானபுரம், திருவிடைமருதூரிலும், மாயூரம், திருவெண்காடு முதலிய ஊர்களிலுமுள்ள மகாதானத் தெருக்கள், திருவையாறு, தஞ்சை வெண்ணுற்றங்கரை, திருவலஞ்சுழி, கும்பகோணம், திருவிடைமருதூர், மாயூரம் முதலிய இடங்களில் நதி தீரத்தில் ஜோடியான விமானங்களேயுடைய புஷ்ய மண்டபங்களும் இவர் கைங்கரியமே. கும்பகோணத்தில் ராஜா பாடசாலேக்கு அடுத்த யாகசாலேத்தெரு இவருடைய வேள்விச்சாலே. திருவிடைமருதூர் புத்யோத்ஸவ வெள்ளி ரதமும், வெள்ளி ரிஷப வாகனமும் இவருடைய திருப்பணி. அநேகமாகச் சோழர்களுக்குப்பின் ஆலயத்திருப்பணிகளே எல்லாம் திருத்தியமைத்தவர் இந்த மகான். கும்பகோண க்ஷேத்திர மாகாத்ம்யத்தின் முடிவில் ஒரு சிறு ச்லோகம் தென்படுகிறது. அதாவது: —

गोविन्ददीक्षितो नाम महानासीत् कलौ युगे ।
तेन षोडशलिङ्गानि स्थापितानि सरोवरे ।।

கோவிந்ததீக்ஷிதோ நாம மஹாநாஸீத் கலௌ யுகே ।
தேந ஷோடசலிங்காநி ஸ்தாபிதாநி ஸரோவரே ।।

மகாமகக் குளத் திருப்பணியும், அதைச் சுற்றிப் பதினாறு சிவாலய விமானங்களையும் அமைத்தவர் இந்த மகான். அவற்றுள் பிரதான விமான மண்டபத்தில் இன்றும் ஒரு துலாபாரச் சில்பக் காட்சியைக் காணலாம். அந்தத் துலா பாரத் தங்கத்தைக் கொண்டே தீக்ஷிதர் இந்தச் சிவாலயத் திருப்பணிகளை எல்லாம் செய்வித்திருக்கிருர். இன்றும் கும்பேச்வரஸ்வாமி கோவிலில் கோவிந்த தீக்ஷிதரும் அவருடைய பத்தினியும் சிவலிங்க உருவத்திலும், அம்பிகை உருவத்திலும் விளங்கி வழிபடப்பட்டு வருகிருர்கள்.

சோழ நாட்டில் காவேரியில் வருஷந்தோறும் மாசி மாதம் முதல் ஆனி மாதம் வரையில் பிரவாகம் இருப்பதில்லை. கும்பகோணத்துக்குச் சற்றுத் தெற்கிலுள்ள திருமலைராஜன் என்னும் நதியில் மாத்திரம் தண்ணீர் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு நாளும் தீக்ஷிதருடைய வீட்டில் அவருடைய எட்டுப் புத்திரர்களும். ஒரு மருமகனும் தானுமாகப் பத்து அக்னிஹோத்ரங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். கோடைக் காலத்திலும் ஸூர்யோதயத்துக்கு முன் ஸ்நானம் செய்து அக்னிஹோத்ரம் செய்யத் திருமலைராஜன் கரையிலுள்ள பழையாறை, கூர்மேச்வரம், திருச்சத்திமுற்றம் முதலிய க்ஷேத்திரங்கள் சூழ்ந்து காமதேனுவின் புத்திரியாகிய பட்டிகை என்னும் ஆவினால் பூஜிக்கப்பட்ட பட்டீச்வர க்ஷேத்திரத்தில் ஓர் அரண்மனை ஏற்பட்டுள்ளது. அந்தப் பட்டீச்வர க்ஷேத்திரத்தில் தான் முற்காலத்தில் திருஞான சம்பந்த ஸ்வாமிகள் ஈசனிடமிருந்து முத்துப் பந்தலைப் பெற்றார். அந்த முத்துப் பந்தல் நிழலிலேயே சிறு குழந்தையாகிய ஞானசம்பந்த ஸ்வாமிகள் திக்விஜயம் செய்து சிவபக்தி வளர்ந்தோங்க, வேதநெறி சைவத்தை ஸ்தாபித்தார். அந்தப்பட்டீச்வர க்ஷேத்திரத்தில் அம்பிகை ஸந்நிதியில் கோவிந்த தீக்ஷிதரும் அவருடைய பத்தினியும் கை கூப்பி புருஷாக்ருதியாக நிற்கின்றனர். இன்றும் அவர்களுக்கு வழிபாடு நடக்கிறது. தீக்ஷிதர் 16-ம் நூற்றாண்டு முடிவிலும் 17-ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் இந்தத்தர்மங்களைச் செய்ததாகத் தெரிகிறது.

காவேரியில் பிரவாகமில்லாத கோடைக் காலத்தில் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அமிழ்ந்து ஸ்நானம் செய்யவேண்டிய பூர்ணிமை முதலிய விசேஷ காலங்களில் கும்பகோணத்துக்கு வடக்கிலுள்ள நீலத்த நல்லூரில் எப்போதும் பிரவாகமுள்ள கொள்ளிடத்தின் கரையில் சங்கராசாரிய மண்டபம் என்னும் பெயருடன் ஒரு பழைய மண்டபம் அமைந்திருக்கிறது. நீலத்த நல்லூர் போகும் வழியில் இடையில் இளைப்பாறுவதற்காக, தேவனாஞ்சேரி கிராமத்திலும் சங்கராசாரிய மண்டபம் ஒன்று அமைந்திருக்கிறது.

சென்ற 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்ரீ காமகோடி பீடத்தில் விளங்கிய ஆசார்ய ஸ்வாமிகள் பூர்வாச்ரமத்தில் மந்திரி கோவிந்ததீக்ஷிதருடைய வம்சத்தில் உதித்தவர். கும்பகோணத்தில் மடத்துக்குத் தென்னண்டை வீடு எப்போதும் பழைய காலம் தொட்டுக் கோவிந்த தீக்ஷிதருடைய வம்சஸ்தர்கள் வாழும் கிருகமாக அமைந்திருக்கிறது. மேற்படி ஆசார்ய ஸ்வாமிகள் 1838 ஆம் வருஷம் காஞ்சீபுரம் சென்று ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கலாகர்ஷணம்,

ஜீர்ணோத்தாரணம், பிரதிஷ்டா கும்பாபிஷேகம் முதலியவைகளைச் செய்து பின்பு 1844 முதல் 1848 வரையில் ஜம்புகேச்வரத்துக்கு விஜயம் செய்து அங்கு அகிலாண்டேச்வரிக்குத் தாடங்கப்பிரதிஷ்டை செய்வித்து, திரும்பிக் கும்பகோணத்துக்கு விஜயம் செய்த சமயத்தில் தஞ்சைக் கோட்டையை அப்போது ஆண்டு கொண்டிருந்த சிவாஜிமகாராஜாவினால் கனகாபிஷேகம் செய்விக்கப்பட்டார்கள். கும்பகோணத்தில் ஸ்ரீமடத்தின் கொல்லைத் தோட்டத்தில் இருக்கும் மூன்றுபிருந்தாவனங்களில் மூன்றாவதான வடக்குக்கோடியிலுள்ள பிருந்தாவனமே இந்த ஆசார்யர்களுடையது.

சோழர்கள் காலத்தில் தஞ்சைப் பெரியகோவிலுக்கு அடுத்த சிவகங்கைக் கோட்டையே அரண்மனையாக இருந்தது. நாயக அரசர்கள் காலத்தில் தற்போதுள்ள தஞ்சைக் கோட்டையை கோவிந்ததீக்ஷிதர் அவர்கள் கருடவ்யூஹ முறையில் அமைத்ததாகவும், அதனால் கோட்டைக்குள் ஸர்ப்ப பயம் இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆதிசங்கர பீடமான காஞ்சியும் காவேரியும், மோக்ஷபுரியாகவும் மோக்ஷநதியாகவும் பாகவதத்தில் 11-ஆம் ஸ்கந்தத்தில் कामकोटिपुरीं काञ्चीं कावेरीं च सरिद्वराम् என்று சொல்லியிருக்கிறது.

சுமார் 250 வருடங்களுக்கு முன் ஸ்ரீ ஆசார்யர்கள் காஞ்சியின் தீர்த்தத்துறை ஸ்தானமான கும்பகோண க்ஷேத்திரத்தையே தலைநகராகக் கொண்டு ஆரம்பத்தில் ஸ்ரீ கும்பேச்வரஸ்வாமி கோவிலில் ஸ்ரீ ஸோமாஸ்கந்தருக்குத் தனி ஆஸ்தானமண்டபக் கோவில் நிர்மாணம் செய்வித்திருக்கிறார்கள். அந்த மண்டப ஸ்தம்பங்களில் தமிழ் க்ரத்தத்திலும், தெலுங்கிலும் ஒரு கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கிறது. அது பின்வருமாறு :—

“சாலீவாகன சகாப்தம் 1722. ரௌத்ரீ வருஷம். ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிபி: நிர்மித: ஸ்ரீ காஞ்சி பீடாபிஷிக்த ஸ்ரீ மஹாதேவேந்திர யதி உபயம்.”

பாடல் பெற்ற ஸ்தலங்களில் கும்பேச்வரஸ்வாமி கோவிலே அநேகமாகக் கல்வெட்டு இல்லாதது என்று சொல்லலாம். அப்படியிருக்கும் இரண்டொரு கல்வெட்டுகளுள் இந்தக் கல்வெட்டும் ஒன்று.

“சாலிவாகன சகாப்தம் 1722. துன்மதி வருஷம், கும்பேச்வர ஸ்வாமி ஸோமாஸ்கந்த மூர்த்திக்கு கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் மூடுன்னு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சந்த்ர மௌளீச்வர தாஸபூத ஸ்ரீ மஹாதேவேந்திரயதி தர்மம்,”

ஆனால் கும்பகோணத்தின் பஞ்சக்ரோச எல்லையும், ஆதி சங்கரருக்குப் பூர்வ காலத்திலேயே மூல சம்பந்தமுள்ளது என்று ஊகிக்க இடமுள்ளது. ஆதிசங்கரர் கேரளத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனாருடைய பெயர் சிவகுரு. அவர் திருச்சூரிலுள்ள சிவாலயத்தில் தவம் செய்ய, அந்தக் கோவிலில் குடிகொண்டிருக்கும் சிவபெருமானே ஸ்வப்னத்தில் தோன்றி அநுக்கிரஹித்தவண்ணம் சங்கரர் என்னும் பெயருடன் சிவ்குருவுக்குத் திருக்குமாரராக அவதரித்தார்.

கேரளதேசத்தின் உற்பத்தியைப்பற்றிப் புராணங்களும் கேரளோத்பத்தி என்னும் நூலும் வரலாறு கூறுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் மேற்குக் கடலுக்கும் இடையே உள்ள நாட்டுக்குக் கேரளம் என்று பெயர். கிழக்கே மலையும் மேற்கில் ஆழமும் உள்ளதனால் மலையாளம் என்னும் பெயர் வந்திருக்கலாம். கேரம் என்றால் தென்னை. அதன் மிகுதியால் கேரளம் என்று வந்திருக்கலாம். கேரளம் என்னும் மலையாளம் அசோகனுடைய கல்வெட்டிலேயே காணப்படுகிறது. இந்தக் கேரளம் என்னும் மலையாளம் முழுவதும் பரசுராம க்ஷேத்திரம். பரசுராமர் எல்லா க்ஷத்திரியர்களையும் வென்று எல்லா ராஜ்யங்களையும் தம்முடையதாக்கிக் கொண்டபின், தாம் பிராம்மணப் பிரம்மசாரியான படியால் தமக்கு இந்த ராஜ்யம் வேண்டாம் என்று நினைத்தார். இந்திரனுடைய தகப்பனாரான காசியபருக்குத் தாம் ஜயித்த ராஜ்யங்களையெல்லாம் தானம் செய்தார். தானம் செய்தபின் காச்யபர் பரசுராமரை, "தானம் செய்தபிறகு தானம் செய்யப்பட்ட ராஜ்யத்தில் நீ இருக்கக் கூடாது" என்று விரட்டினார். பரசுராமர் ஸஹ்ய பர்வதம் என்னும் மேற்குத் தொடர்ச்சி மலையின் உச்சியில் போய் நின்று கொண்டார். அங்கிருந்து சமுத்திர ராஜாவை வேண்டினார். "நீ சற்றுத் தூரம் விலகிக்கொண்டு எனக்கு வாசம் செய்ய நிலம் கொடுக்கவேண்டும்" என்று சொன்னார். பரசு என்றால் கோடரி. சமுத்திர ராஜா பரசுராமரைப் பார்த்து, "நீ மலையுச்சியிலிருந்து உன் கோடரியைச் சமுத்திரத்தில் உனக்கு எவ்வளவு தூரம் சக்தி இருக்கிறதோ அவ்வளவு தூரம் எறி" என்றார். அவர் தமக்கு வேண்டிய நிலம் எவ்வளவோ அவ்வளவு சக்தியை வரவழைத்துக்கொண்டு கோடரியை எறிந்தார். சமுத்திரம் விலகியது. பரசுராம க்ஷேத்திரம் என்னும் கேரளம் உண்டாயிற்று. அங்கு அண்டை நாட்டுச் செம்படவர் முதலியோர் முதலில் குடியேறினார்கள்.

கல்வி வேள்விகளில் தேர்ந்த அந்தணர்களைக் குடியேற்ற வேண்டும் என்று பரசுராமருக்கு அவா ஏற்பட்டது. சோழ நாட்டிலிருந்து சோழியர் என்கிற தமிழ் அந்தணர்களை முதலில் குடியேற்றி

னார். அவர்கள் தண்ணீரும் மழையும் சகதியாயும் உள்ள அந்த நாட்டிலிருந்து திரும்பி ஓடி வராமலிருக்கக் குடுமியை மாத்திரம் உச்சிக் குடுமியாக மாற்றிவைத்தார். ஏதாவது ஓர் ஆசாரத்தை மாற்றிவிட்டால் திரும்பப் பழைய நாட்டுக்கு வந்து சேர்ந்து வாழத் தடையாக இருக்குமென்று நினைத்தார். ஆனாலும் அந்தச் சோழியர்கள் அங்கு வசிக்க மனமில்லாமல் உச்சிக்குடுமியுடனேயே திரும்பித் தமிழ்நாட்டுக்கு வந்து வசிக்க ஆரம்பித்து விட்டனர். ஓர் ஆசாரத்தை மாத்திரம் மாற்றினால் போதாது; இவர்கள் திரும்பி நாட்டுக்குப் போய்விடுகிறார்கள் என்று எண்ணிய அவர் 108 ஆசாரங்களில் 64 ஆசாரங்களை மாற்றியமைத்து மேலும் வேறு அந்தணர்களைக் கேரளத்துக்கு அழைத்துப்போக நினைத்தார். கர்னாடகர்களையும் தெலுங்கர்களையும் அழைத்துப் போனார். அழைத்துப்போய் 64 ஆசாரங்களை அவர்களுக்கு ஏற்படுத்தினார். அவர்களுடைய சந்ததிகளே இப்போதுள்ள நம்பூத்ரிகள். அவர்களுடைய வீடுகளுக்குச் சில இடங்களில் மனை என்றும், சில இடங்களில் இல்லம் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கிறது. மனை என்பது கன்னட மொழியில் வீட்டுக்குப் பெயர். இல்லு என்பது தெலுங்கு மொழியில் வீட்டுக்குப் பெயர். எக்காலத்திலும் தமிழ் நாட்டிலேயே இதர நாட்டு மொழிகள் தலைமுறை தலைமுறையாகப் பேசப்பட்டு வளர்க்கப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. 'மொழிகள் தங்கி வளரும் தமிழ் நாடென்ப.'

கேரளத்தில் ஆதிசங்கரருடைய பந்துக்களுடைய வீடுகளுக்கு மனை என்ற பெயரே வழங்கி வந்ததாக நம்பூத்ரி பிராம்மணர்கள் சொல்கிறார்கள். இப்போது நம்பூத்ரிகளின் ஆசாரத்துக்கும் இதர நாட்டுப் பிராமணர்களின் ஆசாரத்திற்கும் அனேக வேறுபாடுகள் இருக்கின்றன.

ஆதிசங்கரருடைய பிதாவான சிவகுரு தவம் செய்த திருச்சூரை நம்பூத்ரிகள் சிவபுரம் என்று அழைக்கிறார்கள், சிவபுரம் என்ற பெயரே திருச்சிவப்பேரூர் என்றாகித் திருச்சூர் என்று மருவி வந்திருக்கிறது. ஒரு நாட்டவர் மற்ற நாட்டுக்குக் குடிபெயரும்போது, பழைய நாட்டிலுள்ள பெயர்களையே புது நாட்டில் ஏற்படும் ஊர்களுக்கு வைப்பதைப் பார்த்திருக்கிறோம், அமெரிக்காவில் தற்காலம் வசிக்கும் ஆங்கிலேயர்கள் அமெரிக்க ஊர்களுக்கெல்லாம் அநேகமாகப் பழைய பிரிட்டனிலுள்ள பெயர்களையே வைத்திருக்கிறார்கள். இப்போதும் மலையாளத்திலுள்ள பெயர்களில் அநேகம் தமிழ்நாட்டு கிராமப் பெயர்களாகவே இருக்கின்றன. ஆல்வாய், மேச்சேரி, மாத்தூர், சந்த்ரசேகரபுரம், கண்ணனூர், பழூர், முதலிய பெயர்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மலையாளத்திலுள்ள சிவாலயங்

களில் மிகவும் முக்கியமும் பெரிதும் ஊருக்கு நடுநாயகமாகவும் விளங்குவது திருச்சூர் என்னும் சிவபுரத்தின் ஆலயம்.

நம் நாட்டில் சிவபுரம் என்னும் க்ஷேத்திரம் கும்பகோணத்தின் பஞ்சக்ரோசத்துக்குள் கும்பகோணத்திலிருந்து இரண்டு மைலுக்குள் உள்ளது. மனிதர்களுக்குச் சிவகுரு என்ற பெயர், இந்தியாவில் வேறெங்கும் இதுவரையில் கேட்டதில்லை. ஆதிசங்கரின் தகப்பனுருடைய பெயராகவே இந்தியா முழுவதும் கேட்டிருப்பார்கள். இந்தச் சிவகுரு என்னும் பெயர் எங்கிருந்து வந்தது? கும்பகோணத்தில் வசிப்பவர்களுக்கு இது புதிதல்ல. சிவகுருபிள்ளை, சிவகுருநாத செட்டியார், சிவகுருநாத உடையார் முதலிய பெயர்கள் கும்பகோணவாசிகளுக்குச் சகஜமானவை. கும்பகோணத்தை அடுத்துள்ள சிவபுரத்தில் ஆலயத்திலுள்ள சிவபிரானுக்குச் சிவகுருநாத ஸ்வாமி என்று பெயர். திருச்சூர் என்னும் சிவபுரத்தில் தவம் செய்த சிவகுரு என்ற மகானுடைய மூலபுருஷர்கள் நமது சிவபுரத்திலுள்ள சிவகுருநாத ஸ்வாமியையே குலதெய்மைாகக் கொண்டு அந்தப் பெயரையே சூடிக்கொண்டு கும்பகோண ஸ்தலத்தைச் சார்ந்தவர்களே என்று ஊகம் செய்ய முடியாமலிருக்க முடியவில்லை.

மறைமுடிகள் என்னும் வேதாந்தம் அல்லது உபநிஷத்துகளில் ஆழ்ந்து கிடக்கும் தத்துவங்களை உலகம் முழுவதும் போற்றுமாறு கோஷித்தருளி, ஆத்ம தத்துவத்துக்கே கேந்திரஸ்தானமான ஆதி சங்கரரின் உலகப் பண்பாட்டுக்கே கேந்திரஸ்தானமாகக் கும்பகோண க்ஷேத்திரம் இருத்தலுடைய பொருத்தத்தைப்பற்றி நினைக்கும்பொழுதே ஒவ்வோர் உள்ளமும் எவ்வளவு பூரிக்கிறது என்பது அவரவர்களுடைய ஆத்மாநுபவம். மறைமுடிகளுக்கு ஆதி சங்கரர் உரை அருளியதுபோல் நான்மறைகளுக்குமே உரையருளிய வித்தியாரண்யர் தாம் மஹேச்வரனைப் போற்றும் வித்யாதீர்த்தர் என்னும் குருவின் பூர்வாச்ரமத் தகப்பனரின் பெயர் சார்ங்கபாணி என்பது ஸர்வதர்சநஸங்க்ரஹம் என்னும் நூலிலுள்ள,

पारं गतं सकलदर्शनसागराणां
आत्मेचिदार्थचरितार्थितसर्वलोकम् ।
श्रीशार्ङ्गपाणितनयं निखिलागमज्ञं
सर्वज्ञविष्णुगुरुमन्वहमाश्रयेऽहम् ।।

பாரம் கதம் ஸகலதர்சநஸாகராணும்
ஆத்மேசிதார்த்தசரிதார்த்திதஸர்வலோகம் |

ஸ்ரீ சார்ங்கபாணிதநயம் நிகிலாகமஜ்ஞும்
ஸர்வஜ்ஞவிஷ்ணுகுருமந்வஹமாச்ரயேஹம் ||

என்னும் ச்லோகத்திலிருந்து தெரிய வருகிறது.

சார்ங்கபாணி என்னும் பெயரையும் அநேகமாக நம் நகரத்தைச் சுற்றியுள்ளவர்களே வைத்துக் கொள்கிருர்கள். கும்பகோணத்திலுள்ள பெருமாள் ஆராவமுதனுக்கே சார்ங்கபாணி என்ற பெயர் என்பதைப் புதிதாகச் சொல்ல வேண்டாம். ஆனல் இந்தச் சார்ங்கபாணி என்பவர் எவ்வூரைச் சேர்ந்தவர் என்பதை மற்றொரு நூல் (புண்யச்லோகமஞ்ஜரீ) बिल्वारण्यजशार्ङ्गपाणितनयः (பில்வாரண்யஜ சார்ங்கபாணி தநய :) என்று கூறுகிறது.

பில்வாரண்யம் என்பது கும்பகோணத்துக்கு வடமேற்கிலுள்ள திருப்புறம்பியத்துக்கு அடுத்த திருவைகாவூர் என்ற சிவராத்திரி க்ஷேத்திரம். வேதாந்த பாஷ்யம் இயற்றிய ஆதிசங்கரருடைய மூல வம்ச ஸ்தானமும், நான்மறைப் பாஷ்யங்களில் विद्यातीर्थमहेश्वर 'வித்யா தீர்த்தமஹேச்வர' என்று போற்றப்பெறும் வித்யாதீர்த்த மூலவம்ச ஸ்தானமும், காமகோடி புரியின் தீர்த்தத்துறையான காவேரி தீரத்தில் விளங்குவதுமான கும்பகோண க்ஷேத்திரம் ஸ்ரீ ஆதிசங்கர பீடத்தின் தலைநகராக அமைவது நாட்டிலுள்ள எல்லா மக்களின் பாக்கியம்.

பட்டீச்வரத்துக்குத் தெற்கிலுள்ள பழையாறை க்ஷேத்திரத்தை ஏழாம் நூற்றுண்டிலேயே சம்பந்த ஸ்வாமிகள் பழமையான ஆறை க்ஷேத்திரம் என்ற பொருளில் குறிப்பிடுகிருர். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் காஞ்சியை மூதூர் என்று சொல்லியிருக்கிருர்.

கும்பகோண க்ஷேத்திரப் பஞ்சக்ரோசத்துக்கு உட்பட்ட பழையாறை க்ஷேத்திரத்தை உறையூர், புகார், தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் இவைகளுக்கெல்லாம் பிறகு முடிவாகச் சோழர் தலைநகராகக் கொண்டனர் என்பது சரித்திர வரலாறு. ஆயினும் இதர ஊர்கள் சோழர்களின் தலைநகராக இருந்த காலத்திலும் சோழ வம்சத்திலுள்ள மூத்தோர் ஆறையிலேயே வசித்து வந்திருக்கிருர்கள். இக்காரணத்தைக் கொண்டே அதற்குப் பழைய என்னும் அடைமொழி ஆதிகாலத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. ஆறையை அடுத்துச் சோழ மாளிகை என்னும் ஊரும் இருக்கிறது.

ஆகையால் கும்பகோண க்ஷேத்திர எல்லை, பழமை உட்பட எல்லாத் துறைகளிலும் கேந்திரமாக அமைந்திருப்பதுடன், நமது

ஆசார்ய பீடத்தில் சென்ற நூற்றுண்டுத்துவக்கத்தில் அமர்ந்திருந்த ஆசார்ய ஸ்வாமிகளின் மூதாதையான தீக்ஷிதரால் தர்ம நூல்களிலுள்ள எல்லாத் தர்மங்களும் அநுஷ்டிக்கப்பட்டு ஈச்வர ஸாயுஜ்யமடைந்த ஸ்தானமாகவும் ஏற்பட்டதற்கு முடிவாக ஒரு கதை சொல்லி முடிக்கிறேன்.

ராஜா கோவிந்த தீக்ஷிதர் தஞ்சாவூர் ராஜாவுக்கு மந்திரியாக இருந்த போது பட்டீச்வரத்தில் வசித்துக் கொண்டு தினந்தோறும் குதிரையின் மீது தஞ்சைக்கும் போய் வந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் தீக்ஷிதர் அரண்மனையில் வைச்வதேவம் செய்யும் சமயம் தீக்ஷிதருக்குத் தர்ம காரியங்களில் வலக்கையாக விளங்கி வந்து, அதற்கு இரண்டு வருஷங்களுக்கு முன் காலமான ஒரு ஹரிஜன் வந்து வெளியில் நின்றுகொண்டு அவரைக்கூப்பிடுவதாக வீட்டிலுள்ளவர்கள் சொன்னார்கள். "இப்போது கர்மகாலம். ஆகையால் இரண்டு நாழிகை கழித்துவரச்சொல்'' என்று அவர் சொல்லி அனுப்பினார். 'தீக்ஷிதர் நான்கு நாழிகைக்குள் வரவேண்டும்'' என்று அவன் தீர்மானமாகச் சொன்னான். என்னவோ முக்கிய விஷயம் என்று நிச்சயித்து, தீக்ஷிதர் சரி என்று அங்கீகரித்தார். அவனை உயிருடன் பார்த்ததும் தீக்ஷிதருக்குஆச்சரியம் ஏற்பட்டது.அவன் அவரை வெளியில் தனிமையில் கூப்பிட்டுச் சொல்ல ஆரம்பித்தான். "நான் சொல்லப் போவது தேவரகசியம். நான் தங்களுடைய தார்மிக காரியங்களுக்கு ஒத்தாசையாக இருந்த புண்ணியத்தினால் யமதர்மராஜனின் கிங்கரனாக இருக்கிறேன். எனக்கு எந்த ரூபத்தையும் எடுத்துக் கொள்ளும் சக்தி உண்டு. தங்களுக்குத் தெரிவதற்காகப்பழைய ரூபத்தை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன்.விஷயம் யாதெனில், நேற்று யமனுடைய சபையில், புண்ணியம் அதிகம் செய்தவர்களைப் பற்றிய சர்ச்சை எழுந்தது. அப்பொழுது பெரும்பான்மையோர்தங்களைப் பற்றியே (கோவிந்த தீக்ஷிதரைப்பற்றி) உயர்வாகவே குறிப்பிட்டார்கள். உடனே தர்மராஜன் சித்திரகுப்தனிடம், 'தீக்ஷிதர் எல்லா தானதர்மங்களையும் செய்திருக்கிறாரோ என்று நன்றாகக் கணக்கைப் பார்த்துச் சொல் என்றான். சித்ரகுப்தன் கணக்கைப் பார்த்துவிட்டு"இவருக்கு நந்தவனம் ஏற்படுத்தும்தர்மம் பாக்கி'' என்றான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த நான் தங்களிடம் இதைத் தெரிவித்து விடவேண்டும் என்று உடனே கிளம்பி வந்தேன்'' என்றான்.

தீக்ஷிதர் —நீ சொல்பவற்றை எவ்விதம் நம்புவது? இதைத்தெரிவிப்பதற்காக நீ இங்கு வருவதை யமன் எப்படி அநுமதித்தான்?

யமகிங்கரன் — நான் இங்கு யமதர்மராஜனின் ஆஜ்ஞைப்படி வேறுகாரியமாகவும் வந்திருக்கிறேன். அதைத் தாங்கள் கவனித்தாலேயே என் பேச்சில் நம்பிக்கை ஏற்படும்.

தீக்ஷிதர் — அது என்ன?

யமகிங்கரன்—இங்கே தாங்கள் கட்டுவிக்கும் ஆலயத் தெற்குக் கோபுரத் தள வேலையின் முக்கிய ஸ்தபதியின் உயிரை எடுத்துப் போவதற்காக வந்திருக்கிறேன்.

தீக்ஷிதர் — எப்போது அவனுடைய உயிரை அபகரிப்பாய்?

யமகிங்கரன் — சரியாக மாலை 4½ மணிக்கு.

தீக்ஷிதர் — எப்படி அபகரிப்பாய்?

யமகிங்கரன் — கோபுரத்தின்மேல் கல்லை ஏற்றுவதற்காக எல்லோரும் தூக்கிக்கொண்டு போகும்போது அவன் கோபுரத்திலிருந்து விழுந்து காலமாவான்.

இவ்விதம் சொல்லி அவன் மறைந்தான்.

தீக்ஷிதர், 'இந்த ஸ்தபதி இல்லாவிட்டால் கோபுரவேலை நன்கு பூர்த்தியடையாது. இவனுக்குச் சமமானவன் வேறில்லை. ஆகையால் இவனைக் காப்பாற்றுவது நம் கடமை' என்று ஆலோசித்து அந்த ஸ்தபதியை உடனே அவசரமாகக் கூப்பிட்டு வரச்செய்து அவனைத் தம் அரண்மனையில் ஓர் அறையில் பூட்டிச் சாவியைத் தம்மிடமே ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டார். ஒருவருக்கும் காரணம் விளங்கவில்லை. இவரைக் கேட்கவும் தைரியம் இல்லை. ஸ்தபதியும், 'நான் ஏதோ தவறு செய்திருப்பேன். அதற்காகத்தான் இவ்விதம் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டான். 4½ மணி சுமாருக்கு அவருடைய மற்றக் காரியஸ்தர்கள் அவசரமாக ஓடோடி வந்தனர். *தீக்ஷிதர்* என்ன விஷயம் என்று விசாரித்தார். காரியஸ்தர்கள், "பிரதான ஸ்தபதி கோபுரத்திலிருந்து விழுந்து காலமானான்'' என்றனர். *தீக்ஷிதர்*, "அவன் என் அரண்மனையில் அறையில் பூட்டப்பட்டுச் சாவி இதோ இருக்கிறதே! இதை எவ்விதம் நம்புவது ?'' என்றார்.

காரியஸ்தர்கள், "தாங்கள் பூட்டியிருந்தது உண்மை. பிறகு மற்ற ஸ்தபதிகள் எல்லாரும் வந்து பிரதான ஸ்தபதி சமீபத்தில்

இருந்தால்தான் அந்தக் கல்லை ஏற்ற முடியும்; அதை ஏற்றும் வரையில் அவனை எங்களுடன் இருக்க அநுமதிக்க வேண்டும் என்று தங்களிடம் பிரார்த்தித்தனரே. தாங்கள் அப்படியே என்று சாவியை எங்களிடம் இப்போதுதான் பத்து நிமிஷங்களுக்கு முன் கொடுத்தீர்கள். நாங்கள் அவனை விடுவித்துப் பழையபடியே அறையைப் பூட்டித் தங்களிடம் சாவியை ஒப்படைத்தோமே'' என்றனர். தீக்ஷிதருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் விதியின் பலத்தினால் அவருக்கு அவனைப் பூட்டிவைத்திருந்த காரணம் பத்து நிமிஷம் எறந்து போய்விட்டது.

இந்தச் சம்பவத்தினால் யமகிங்கரன் தம்மைப்பற்றிக் குறிப்பிட்டது உண்மை என்று அவர் கண்டுகொண்டார். உடனே தம் அரண்மனைகளையெல்லாம் நந்தவனத் தோட்டமாக மாற்றிவிட்டார். தாம் ஒரு குடிசையை அமைத்துக்கொண்டு அதில் வசிக்க ஆரம்பித்தார். இப்போதும் அந்த இடங்களுக்கு அரண்மனைத் தோட்டம் என்று பெயர் வழங்கி வருகிறது.

கும்பகோணம் ஸ்ரீமடத்தின் பின்புறம் உள்ள வடகோடி பிருந்தாவனத்தில் ஜீவன் முக்தராக பிரகாசித்துக் கொண்டிருக்கும் 64-வது பீடாதிபதியான பராத்பர குரு ஸ்வாமிகள் அவர்கள், மஹாமந்திரி ராஜாகோவிந்த தீக்ஷிதர், ஸ்ரீ வேங்கடமகி இவர்கள் வழி வந்தவர்கள் என்பதையும், கும்பகோணம் ஸ்ரீமடத்தின் தென்புறம் உள்ள கிருஹத்தில் அந்த மஹநீயர்களின் மூதாதையர்கள் வசித்து வந்தார்கள் என்பதையும் தெளிவாகச் சித்தரிக்கும் கட்டுரை பிர்ம்மஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் 1964ல் காமகோடி பிரதீபம் என்ற மாத இதழில் பிரசுரம் செய்யப்பட்டதை மீண்டும் இத்துடன் இங்கு வெளியிடுவதற்குப் பெருமைபடுகிறோம். பரமஸ்ரீ ராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களும் காமகோடி பிரதீபத்தின் பிரசுர கர்த்தாவான ஸ்ரீமான் K. நீலகண்ட அய்யர் அவர்களுக்கும் கிருதக்ஞதையை தெரிவித்துக் கொள்கிறோம்.

(மந்திரி ரத்னம்) சேஷய்யா சாஸ்திரி
